# செய்திக் குறிப்பு

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84

தமிழ்நாட்டை சார்ந்த விளையாட்டு நிர்வாகிகள் / ஆதரவாளர்கள் / நன்கொடையாளர்கள் / நடுவர்கள் மற்றும் ஆட்ட நடுவர்கள் ஆகியவர்களுக்கு 2010–2011–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விளையாட்டு விருது வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. ஒவ்வொரு தனி நபருக்கும் ஒரு தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சின்னம் பதித்த நினைவுப் பரிசு வழங்கப்படும். தமிழகத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் எண்ணிக்கை, செலவு செய்யப்பட்ட தொகை, பன்னாட்டு, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டது, நடுவராக பணிபுரிந்தது போன்றவைகளின் அடிப்படையில் இவ்விருது பரிசீலிக்கப்படும்.

2010–2011–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விருதிற்கான விளையாட்டு நிர்வாகிகள் / ஆதரவாளர்கள் / நன்கொடையாளர்கள் / நடுவர்கள் மற்றும் ஆட்ட நடுவர்கள் ஆகியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கான சாதனைகள் தேர்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும். அதாவது 1–4–2008 முதல் 31–3–2010 வரை. விருது வழங்கும் ஆண்டுக்கு முன்பாக இவர்கள் மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட விளையாட்டு அலுவலர் அல்லது மாநில விளையாட்டுக் கழகம் மூலமாக உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை–84 அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விளையாட்டு நிர்வாகிகள் / ஆதரவாளர்கள் / நன்கொடையாளர்கள் / நடுவர்கள் மற்றும் ஆட்ட நடுவர்கள் ஆகியவர்களுக்கான 2010–2011–ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் விருதிற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விதிமுறைகள் ஆகியவைகளை

மாவட்ட விளையாட்டு அலுவலர் / மாநில விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இணைய தளத்தின் முகவரி (www.sportsinfotn.com)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்ப மேலுறையின் மீது ‘‘முதலமைச்சர் விருதிற்கான விண்ணப்பங்கள்’’ என எழுதப்பட்டு, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், **116–ஏ**, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, நேரு பூங்கா, சென்னை**–84** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் **31–10–2010.**